**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 08ம் நாள்
**இ.ம.எண். 2/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 26/2019**

மோகன்தாஸ் ..மனுதாரர்கள்/வாதி

//எதிர்//

சரவணன் ..எதிர்மனுதாரர் /பிரதிவாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 20.09.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.R.சரவணகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சங்கரன் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று 24.09.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

## உத்தரவு

மனுதாரர்களால் இம்மனுவானது வாதுரைக்காக போடப்பட்ட வழக்கினை ரீஓபன் செய்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர் மற்றும், வாதி தரப்பில் வழக்கினை நடத்தும் வழக்குரைஞர் ஆவார். அசல் வழக்கானது மனுதாரர் சொத்துரிமை விளம்பல் கேட்டும், அதனை அண்டித்து பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு சொத்தினில் இருந்து மூங்கில் கொத்துக்களை பிரதிவாதியானவர் அகற்றியதால் அதற்கு ரூ.10,000/– இழப்பீட்டுத் தொகையினை கேட்டும் அசல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கு சொத்தானது மனுதாருக்கு சொந்தமானது என்றும், இது குறித்து பதிவு ஆவணங்களை வாதியானவர் மேன்மைமிகு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், மாறாக பிரதிவாதியானவர் அவரது பெயரில் உள்ள வருவாய் ஆவணங்களை மட்டுமே தாக்கல் செய்துள்ளதாகவும்,

இவ்வாறான தருவாயில் வழக்குச் சொத்துரிமை குறித்து மூல ஆவணங்கள் எதுவும் பிரதிவாதியின் பெயரிலோ, பிரதிவாதியின் முன்னவர்கள் பெயரிலோ ஏற்படவில்லை என்கிற நிலைப்பாட்டினை மேன்மைமிகு நீதிமன்றத்தாரவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவது இன்றியமையாதது என்றும், ஆதலால் வழக்குச் சொத்து பொறுத்து 01.11.1975 முதல் 01.11.2022 காலம் வரையிலான வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமானதாகவும், நியாயமாகவும் உள்ளது என்றும், எனவே, வாதுரைக்காக போடப்பட்ட வழக்கினை ரீஓபன் செய்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிருரையின் சுருக்கம்</u> :

3. இம்மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. இம்மனு மனுதாரர்/வாதி அபிடவிட் தாக்கல் செய்யாமல் வழக்கறிஞர் அபிடவிட் தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்கக்கூடியதில்லை என்றும், அதற்கான அவசியத்தையும் அபிடவிட்டில் தெரிவிக்கவில்லை என்றும், அபிடவிட்டில் மனுதாரர் யாரை சாட்சியாக விசாரிக்க உள்ளார் என்ற விபரமும், சாட்சி பட்டியலோ தாக்கல் செய்யவில்லைஎன்றும், அசல் வழக்கில் வாதி தரப்பு வாதுரைக்காக போடப்பட்டிருந்த நிலையில் காலதாமதப்படுத்தும் கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தனது மனுவில் 01.11.1975 முதல் 01.11.2022 வரைக்கான வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்ய வேண்டுமென தெரிவித்துள்ள நிலையில் அது குறித்து ஆவணங்களை ஏற்கவோ PW1 ஐ recall செய்யவோ எவ்வித மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே, இம்மனுவினை கூடுதல் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

<u>தீர்வு:</u>

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக சொத்துரிமை விளம்பல் பரிகாரம், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இழப்பீட்டுத் தொகை கேட்டும் அசல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கு சொத்தானது

மனுதாரருக்கு சொந்தமானது என்ற பதிவு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாகவும், மாறாக பிரதிவாதியானவர் அவரது பெயரில் உள்ள வருவாய் ஆவணங்களை மட்டுமே தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வாறான தருவாயில் வழக்குச் சொத்துரிமை குறித்து மூல ஆவணங்கள் எதுவும் பிரதிவாதியின் பெயரிலோ, பிரதிவாதியின் முன்னவர்கள் பெயரிலோ ஏற்படவில்லை என்றும், ஆதலால் வழக்குச் சொத்து பொறுத்து 01.11.1975 முதல் 01.11.2022 காலம் வரையிலான வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமானதாகவும், நியாயமாகவும் உள்ளதால் வாதுரைக்காக போடப்பட்ட வழக்கினை ரீஓபன் செய்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில், இம்மனு மனுதாரர்/வாதி அபிடவிட் தாக்கல் செய்யாமல் வழக்கறிஞர் அபிடவிட் தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்கக்கூடியதில்லை என்றும், அபிடவிட்டில் மனுதாரர் யாரை சாட்சியாக விசாரிக்க உள்ளார் என்ற விபரமும், சாட்சி பட்டியலோ தாக்கல் செய்யவில்லை என்றும், அசல் வழக்கில் வாதி தரப்பு வாதுரைக்காக போடப்பட்டிருந்த நிலையில் காலதாமதப்படுத்தும் கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தனது மனுவில் 01.11.1975 முதல் 01.11.2022 வரைக்கான வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்ய வேண்டுமென தெரிவித்துள்ள நிலையில் அது குறித்து ஆவணங்களை ஏற்கவோ PW1 ஐ recall செய்யவோ எவ்வித மனுவும் தாக்கல் செய்யாததால் இம்மனுவினை கூடுதல் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரரால் இந்த வழக்கிற்கு விளம்பல் பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இழப்பீட்டுத்தொகை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில், வழக்குச் சொத்துரிமை குறித்து மூல ஆவணங்கள் எதுவும் பிரதிவாதியின் பெயரிலோ, பிரதிவாதியின் முன்னவர்கள் பெயரிலோ ஏற்படவில்லை என்றும், வழக்குச் சொத்து பொறுத்து 01.11.1975 முதல் 01.11.2022 காலம் வரையிலான வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமானதாகவும், நியாயமாகவும் உள்ளதால் வாதுரைக்காக போடப்பட்ட வழக்கினை

ரீஓபன் செய்து உத்தரவு கோரியுள்ளார். மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ள கூடிய ஒன்று என இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது. எனவே, மனுதாரருக்கு சான்றிதழ்களை தாக்கல் செய்ய வாய்ப்பு அளித்து இந்த வழக்கினை முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இந்த மனுவை அனுமதிக்கலாம் என முடிவு செய்கிறது.

**9. முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 24.09.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.09.24 14:30:31 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.09.24 14:30:34 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**